சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி! ... முதல் பக்கத் தொடர்ச்சி

மு.க.ஸ்டாலின் - இது எல்லாம் சகஜம், சர்வ சாதாரணம். மக்களை திசை திருப்புவதற்காக செய்யக்கூடிய நாடகம்.

இதை எல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கே தெரியாதா. நீங்களே உங்கள் மனசாட்சியை கேட்டுப் பாருங்கள். உங்களுக்கே இது நியாயமா, இதை எதற்காக செய்கிறார்கள் என்பது உங்களுக்கே தெரியும்.

கேள்வி - பெங்களூருக்கு செல்கிறீர்கள், காவேரி விவகாரம் பற்றி பேசுவீர்களா?

காவேரி; கலைஞர் வழியை கடைப்பிடிப்போம்!

மு.க.ஸ்டாலின் - காவேரி பிரச்சினை பொறுத்தவரையிலே, மேகதாது பிரச்சினை பொறுத்தவரையிலே என்றைக்கு கலைஞர் அவர்கள் அதிலே ஒரு முடிவெடுத்து அந்தப் பணியை நிறைவேற்றி கொண்டிருந்தாரோ, அந்தப் பணியில் கிஞ்சிற்றும் மாறாமல் அதை கடைப்பிடிப்போம். இந்தக் கூட்டம் என்பது, ஒன்றியத்தில் இருக்கக்கூடிய ஆட்சியை அப்புறப் படுத்துவதற்காக நடைபெறவுள்ள கூட்டம். காவேரி பிரச்சினை பற்றிய கூட்டம் அல்ல, இன்னும் சொல்லப் போனால், இப்போது இந்தியாவிற்கே ஆபத்து வந்திருக்கிறது, அந்த ஆபத்திலிருந்து இந்தியாவை காப்பாற்றுவதற்காகத் தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறதே தவிர வேறு அல்ல.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

பெங்களூருவில் மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (17.7.2023) பெங்களூர் சென்றடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை விமான நிலையத்தில், கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் அவர்கள் சால்வை அணிவித்து மலர்கொத்து வழங்கி வரவேற்றார். உடன் கர்நாடக மாநில மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. ஆகியோர் உள்ளனர்.

'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே, இருட்டினில் நீதி மறையட்டுமே'!

அமலாக்கத்துறை சோதனை குறித்து அமைச்சர் துரைமுருகன் கண்டனம்!

சென்னை, ஜூலை 19-

உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்று வருவதை விமர்சிக்கும் வகையில், "என்னதான் நடக்கும் நடக்கட்டுமே, இருட்டினில் நீதி மறையட்டுமே" என்ற பாடல் வரிகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மேற்கோள் காட்டி கண்டித்துள்ளார்.

தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்று வருகிறது. சென்னை மற்றும் விழுப்புரத்தில் அமைச்சர் பொன்முடிக்கு தொடர்புடைய 9 இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். அமைச்சர் பொன்முடியின் மகன் வீட்டிலும் சோதனை நடைபெற்று வருகிறது.

2006ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரை கனிம வளத்துறை அமைச்சராக பொன்முடி இருந்தார். அப்போது விதிமுறைகளை மீறி செம்மண் எடுத்து அரசுக்கு 28 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக 2012ம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் பதிவு செய்த இந்த வழக்கின் அடிப்படையில் அமலாக்கத்துறை சோதனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில் இந்த அமலாக்கத்துறை சோதனையை விமர்சிக்கும் வகையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் "என்னதான் நடக்கும் நடக்கட்டுமே, இருட்டினில் நீதி மறையட்டுமே" என்ற பாடல் வரிகளை மேற்கோள் காட்டி கண்டித்துள்ளார்.

மணிமாறன் தென்றல் நிகழ்ச்சி ஏற்பாடு! தளபதி முருகேசன் தலைமை! கே.வி.எஸ்.சபரி கார்த்திகேயன் வரவேற்புரை!

பொள்ளாச்சியில் இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

வாகை சந்திரசேகர் - செந்தலை கவுதமன் - கே.இ.பிரகாஷ் சிறப்புரை!

கோவை, ஜூலை 19-

கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் பொள்ளாச்சி லாரி உரிமையாளர்கள் திருமண மண்டபத்தில் 14.07.2023 அன்று மாலை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்கவிழா "கருத்தரங்க" நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் வரவேற்புரையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் புவனேஷ், சல்மான்கான் நாசர், கே.சபரிகிருஷ்ணன், வி.ஆர்.நிஷாந்த், இருகூர் உதயபூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் சிறப்புரையாற்றினார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்கள் உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

"கலை உலகும் கலைஞரும்" எனும் தலைப்பில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநில தலைவர் வாகை சந்திரசேகர் "கோவை தந்த கலைஞர்" எனும் தலைப்பில் கழக இலக்கிய அணி புரவலர் செந்தலை ந.கவுதமன் ஆகியோரின் கருத்தரங்கம் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஏற்பாடு செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் கழக சட்ட திட்ட திருத்தகுழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், கழக தீர்மானக்குழு உறுப்பினர் ஜி.ஏ.அதிபதி, பனப்பட்டி தினகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.சந்திரசேகர், தலைமைச் செய்ற்குழு உறுப்பினர்கள் மு.க.முத்து, எம்.அமுதபாரதி, கோழிக்கடை ந.கணேசன், மாவட்டக் கழகத் துணை செயலாளர்கள் சாமிநாதன், பொன்னுச்சாமி, செ.கனிமொழி, மாவட்டக் கழகப் பொருளாளர் ஜெயப்பிரகாஷ், நகர மன்றத் தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், நகர மன்ற துணை தலைவர் கௌதமன், பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.பாலகிருஷ்ணன், அண்ணாதுரை, நடராஜ், ஏ.ஆர்.வி.சாந்த லிங்கம், ஜெயக்குமார், மஞ்சுசௌமியா, முன்னாள் அரசு வழக்கறிஞர் சாதிக் அலி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மா.சண்முகம், நகராட்சி வழக்கறிஞர் மருதராஜ், சிட்டி டிவி.உசேன், பி.ஏ.செந்தில்குமார், ஆனைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் தேவசேனாதிபதி, ஆனைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் யுவராஜ், பொள்ளாச்சி வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் ராஜூ, ஆனைமலை வடக்கு ஒன்றிய செயலாளர் கன்னிமுத்து, கிணத்துகடவு தெற்கு ஒன்றிய செயலாளர் செ.ஆ.துரை, கிணத்துக்கடவு வடக்கு ஒன்றிய செயலாளர் கிரிகதிர்வேல், வால்பாறை நகர கழக செயலாளர் குட்டி (எ) சுதாகர், சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வி.அன்பரசு, மதுக்கரை ஒன்றிய செயலாளர் ஆர்.விஜயசேகரன், பொள்ளாச்சி நகர அவை தலைவர் அழகப்பன், நகர துணை செயலாளர்கள் தர்மராஜ், நாச்சிமுத்து, பாத்திமா, நாகராஜ், இரும்பு சுப்பிரமணியம், கோட்டூர் பேரூர் கழக செயலாளர் பால்ராஜ், ஆனைமலை பேரூர் கழக செயலாளர் ஏ.வி.செந்தில்குமார், பெரிய நெகமம் பேரூர் கழக செயலாளர் எம்.முத்துகுமார், ஏட்டிமடை பேரூர் கழக செயலாளர் ஆனந்தகுமார், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் பாலன், துணை அமைப்பாளர்கள், சதிஷ்குமார், சிவானந்தம், முத்துகுமார், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் மாணிக்கராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பிரபாகரன், தொண்டரணி துணை அமைப்பாளர் செ.கு.பாலச்சந்தர், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மங்கையர்கரசி, மாவட்ட மாணவரணி அணி அமைப்பாளர்கள் தனம் தங்கதுரை, சூலூர் பிரபு, நெகமம் பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர் சரவணகுமார், பேரூர் கழகத் துணைச் செயலாளர் சந்துரு, பார்த்திபன், தனபால், மாவட்ட பிரதிநிதி தங்கவேல் மாரிமுத்து, வெங்கடாச்சலம், நாகராஜ், செல்வராஜ், நஞ்சப்பன், குருதேவர், மோகன்வாசு, கந்தசாமி, கார்த்திகேயன், மதன், சங்கர் அரவிந்த், நந்தவெல்முருகன், நீதி, கிருஷ்ணசாமி, நகர மன்ற உறுப்பினர்கள் மணிமாலா தென்றல், இந்திரா கிரி, போர்வெல் துரை, ஈ.ஆர்.பழனிசாமி, கவிதா, கந்தமனோகரி, கீதா லட்சுமி, சு.தங்கவேல், மதிமுக துரைபாய், விஜயா காயத்திரி, சண்முகபிரியா, நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சதீஷ், பைக்பாபு, ஈஸ்வரன், வட்ட கழக செயலாளர்கள் கு.ராமசந்திரன், பூவை செல்வராஜ், ஜெகதீசன், கே.பி.மணிகண்டன், ஜெயலாபுதீன், சி.எஸ்.கருப்பையா, சி.ஆறுமுகம், ரமேஷ்குமார், செந்தில்ராஜ், ஞானவேல், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ராம்பட்டிணம் சபரி, மலர் பாலு, ராஜபெருந்தகை, இமயவரம்பன், செல்வி, டிராவல்ஸ் மனோஜ், பல்லடம் ரோடு மாரிமுத்து, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் அரவிந்த் வசந்தராம், விக்னேஷ் பிரபு, க.மணிகண்டன், கு.மகேந்திரன், அவினேஷ் கார்த்தி, நவின்குமார், கீர்த்தி ஆனந்த, வி.பி.சி.அருண், முரளிகிருஷ்ணன், அருண் பிரகாஷ், அஸ்வின், ரகு, கௌதம், சைஜூ, பாண்டிதுரை, பிரவின்குமார், சுபாஷ், தாஸ்பிரபு, சபரிதுரை, ஆட்டோ நாகராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவருக்கும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா.திருமலைராஜா நன்றி கூறினார்.

கோத்தகிரி போக்குவரத்துக் கழக தொ.மு.ச. சார்பில் நல உதவிகளை மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் வழங்கிப் பேசினார்.

அனைவரும் இணைந்து நின்று மக்களாட்சியைப் பாதுகாப்போம்!

நம் பெருமைமிகு நாட்டின் ஒளிமிகு எதிர்காலத்தை உறுதி செய்வோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

பெங்களூரு, ஜூலை 19-

பெங்களூருவில் நேற்று மாலை எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் நடந்து வந்த நிலையில் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நாம் அனைவரும் இணைந்து நின்று மக்களாட்சியைப் பாதுகாப்போம்! நம் பெருமைமிகு நாட்டின் ஒளிமிகு எதிர்காலத்தை உறுதி செய்வோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

கர்நாடகத்துக்கு வணக்கம்!

பாட்னாவுக்குப் பின், மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளான நாங்கள் அழகிய பெங்களூரு மாநகரில் ஜனநாயகம் காக்க ஒன்றிணைந்துள்ளோம்.

முக்கியமான இக்காலகட்டத்தில், பா.ஜ.க.வின் ஜனநாயகத்துக்குப் புறம்பான உத்திகளுக்கு எதிராக நாம் ஒரே அணியாக நிற்க வேண்டியது அவசியம். அண்மையில் நடந்த கர்நாடக மாநிலச் சட்ட மன்றத் தேர்தலில் பா.ஜ.க.வின் பிற்போக்கு அரசியலை நிராகரித்து மக்கள் மிகவும் சக்திவாய்ந்த எடுத்துக்காட்டை முன்வைத்துள்ளனர். இதனை இந்திய அளவிலும் செய்துகாட்டுவோம்!

நாம் அனைவரும் இணைந்து நின்று, மக்களாட்சியைப் பாதுகாப்போம்! நம் பெருமைமிகு நாட்டின் ஒளிமிகு எதிர்காலத்தை உறுதிசெய்வோம்!

இவ்வாறு அந்த சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனைக்குக் கண்டனம்!

பா.ஜ.க.விற்கு கர்நாடக நிலைதான் ஏற்படும்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, ஜூலை 19-

அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை மேற்கொண்டிருப்பது கண்டனத்திற்குரியது. இதேபோன்ற நிலையை தொடர்ந்து மேற்கொண்டால் கர்நாடக மாநிலத்தில் பா.ஜ.க.விற்கு ஏற்பட்ட நிலைதான் நாடு முழுவதும் தொடரும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார்.

தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை நடத்தும் சோதனைக்கு கடும் கண்டனம் தெரிவித்து அளித்த பேட்டி வருமாறு:-

நாடு முழுவதும் மோடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டுள்ளன. முதல் கட்டமாக பாட்னாவில் நடந்த போது இதேபோல் தான் அமைச்சர் செந்தில்பாலாஜி வீட்டில் சோதனை போட்டார்கள். 2வது கட்டமாக இன்றும், நாளையும் பெங்களூருவில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். எதிர்க்கட்சிகள் ஒன்று கூடுவதால் ஏற்பட்டுள்ள எரிச்சலாலும், மக்கள் கவனத்தை திசை திருப்பவும் அமலாக்கத்துறையை ஏவி விட்டு சோதனை நடத்துகிறார்கள்.

இந்த சோதனைகளுக்கெல்லாம் அஞ்ச மாட்டோம். என்ன வழக்குக்காக சோதனை நடத்துகிறார்கள் என்பதே தெரியவில்லை. அவரது வக்கீல் என்ற முறையில் அதை தெரிந்து கொள்ளும் உரிமை எங்களுக்கு உள்ளது. ஆனால் எங்களை உள்ளேயே அனுமதிக்கவில்லை. அமலாக்கத்துறைக்கு இவ்வளவு அதிகாரம் இருக்கிறதா என்பதே சுப்ரீம் கோர்ட்டின் விசாரணையில் உள்ளது.

இதேபோல் தான் கர்நாடகத்தில் சோதனை நடத்தினார்கள். ஆனால் டி.கே.சிவகுமார் 1 லட்சத்து 80 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அமலாக்கத்துறை 100 வழக்கு போட்டால் அதில் 2 வழக்குகளில் கூட குற்றம் நிரூபிக்கப்படுவதில்லை. மோடியின் இந்த நடவடிக்கைகளால் கர்நாடகத்தில் ஏற்பட்ட நிலை தான் பா.ஜனதாவுக்கு ஏற்படும்.

தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் தான் உள்ளன. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை படுதோல்வியை சந்திப்பார்கள். ஒரு சர்வேயில் 140 முதல் 160 இடங்களில் தான் பா.ஜனதா வெற்றி பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி மிரட்டல்களுக்கு அஞ்ச மாட்டோம். நாங்கள் மிசாவையே சந்தித்தவர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

திருச்சியில் முதல்வர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில்

கடலூர் கிழக்கு மாவட்ட அனைத்து நிலை முகவர்களும் பங்கேற்பு!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

கடலூர், ஜூலை 19-

கடலூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயல் வீரர்கள் கூட்டம் வடலூர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (17.07.2023 - திங்கள் கிழமை) பிற்பகல் 12:00 மணி அளவில், மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில் நடைபெற்றது.

வருகிற 26ம் தேதி திருச்சியில், தமிழகமுதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள வாக்காளர் முகவர்களுக்கான பயிற்சி பாசறை கூட்டத்தில், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட அனைத்து நிலை முகவர்களும் கலந்துகொள்ளும் வகையில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி செயலாளர்களும் ஆயத்தப்படுத்துமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2024 தகுதி நாளாக கொண்டு சிறப்பு சுருக்கமுறை வாக்காளர்கள் திருத்தம், சேர்க்கை ஆகிய பணிகளை 21.07.2023 வெள்ளி முதல் 2108 2023, திங்கள் கிழமை வரை நடைபெறுகிறது. அனைத்து வாக்குச்சாவடி நிலை முகவர்களும், வாக்குச்சாவடி உட்பட்ட பகுதிகளில் வாக்காளர் சேர்க்கை, திருத்தம் உள்ளிட்ட பணிகளை செம்மையாக செய்திடுமாறு மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி செயலாளர்களும் தங்களை இப்பணியில் முழுமையாக ஈடுப்படுத்திக் கொள்ள வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.சிவகுமார், தங்க.ஆனந்தன், டி.காசிராஜன், பி.சுப்பிரமணியன், ப.இராமலிங்கம், முத்து.பெருமாள், ஆர்.கலையரசன், கே.ஆர்.ராயர், ப.திருமாவளவன், தெ.காசி ராஜன், பி.சுப்ரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், கே.ஆர்.கே.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், ஆர்.நாராயணசாமி, எம்.மனோகரன், ஏ.எஸ்.மதியழகன், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.கோவிந்தசாமி, த.சங்கர், நடராஜன், வி.ஆர்.ராஜேந்திகுமார், எம்.சோழன், இர.விஜயசுந்தரம், பி.சுந்தரபாண்டியன், இரா.கலையரசன், வி.கோவிந்தசாமி,

மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ஞானசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ் விஜய ராகவன், நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், பேரூர் கழக செயலாளர்கள் த.கந்தன், ப.மனோகரன், எஸ்.கணேசமூர்த்தி, கே.வி.பி.சங்கர், சி.பக்தவசலம், ஏ.ஆர்.முனவர் ஹூசேன், க.பழனி, ஜெ.அன்வர் சதாத், பூ.செல்வகுமார்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு.சந்திரசேகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் கௌதமன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மகநாதன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம், பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் ஆரூர்.மணிவண்ணன், சோ.ரவிச்சந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.